

மீஞ்சூர் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய செயலாளர் கா.சு.ஜெகதீசன் வரவேற்புரையில் ஒன்றிய அவைத்தலைவர் வி.வி.பாண்டுரங்கன் தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் கா.சு.தனசிங், பி.ஸ்டாலின், எம்.பார்த்தசாரதி, கஸ்தூரிமகேந்திரன், கே.எஸ்.குமார், ஏ.முனுசாமி, வி.சி.குணாளன், தேசராணிதேசப்பன், கே.உதயகாந்தவராயன், பி.அமுதா, டி.வெற்றிசெல்வி, கோமாள, மோகனபிரியா முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் மூப்பெரும் விழா பொற்கிழி வழங்குதல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை மற்றும் 2026 தேர்தல் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினர். நிகழச்சியில் பி.ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலதி, ஏ.வி.ராமமூர்த்தி, ஜி.ரவிக்குமார், க.சு.தமிழ்உதயன், பி.முத்து, அத்திபட்டு ஜி.ரவி, டி.கே.சந்திரசேகர், ஜான்(எ)பொன்னுசாமி, டி.ஜெ.டி.தினேஷ், சி.மு. தேவன், டாக்டர்.என்.வில்சன்நிலவழகன், அணிகளின் அமைப்பாளர்கள் ரோஸ்பொன்னையான், ஏ.கே.சம்பத்குமார், கே.ஆறுமுகம், மீ.வி.கோதண்டன் உள்ளிட்ட கழக முன்னோடிகள் கிளைச் செயலாளர்கள் பங்கேற்றனர். எஸ்.தேவராஜ் நன்றியுரையாற்றினர்.

## கழகப் பொதுக்குழு உறுப்பினர்
# கெங்கவல்லி சேக் மொய்தீன் மறைவு!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.12-

கழகப் பொதுக்குழு உறுப்பினரும் கெங்கவல்லி முன்னாள் பேரூர் கழகச் செயலாளருமான சேக் மொய்தீன் அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை மறைந்த சேக் மொய்தீன் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டம் திரு வி க நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 72 கன்னிகாபுரம் பகுதியில் அமைந்துள்ள நூலகத்தினையும் வார்டு எண் 71க்கு உட்பட்ட பெரம்பூர் படேல் சாலையில் அமைந்துள்ள நூலகத்தினையும் கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி நேரில் சென்று ஆய்வு பணிகளை மேற்கொண்டார். மேலும் இந்நிகழ்வில் 71வது வார்டு மாமன்ற உறுப்பினர் புனிதவதி எத்திராசன் 72வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் மு.சரவணன் மாவட்ட நூலக அதிகாரி DLO கவிதா மற்றும் அதிகாரிகள் , புல்லட் ரமேஷ் பரிமளாசுரேஷ், அண்ணாதுரை. சுரேஷ் , ஐடி விங் சிவகுமார், இளைஞர் அணி சஞ்சீவ், ஐ டி விங் எஸ். கௌதம் ஆகியோர் உடனிருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி - கா.பிரபு சிறப்புரை!
# துறைமுகம் மேற்கு 57 (அ) வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!
### பகுதிச் செயலாளர் எஸ்.முரளி முன்னிலை! பா.அண்ணாதுரை அறிக்கை!

சென்னை, செப். 12-

துறைமுகம் மேற்கு பகுதி, 57 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, 57 (அ) வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் (13.09.2024 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில் நாராயண குருவைய்ய செட்டி திருமண மண்டபம், எண். 49, வரதா முத்தியப்பன் தெருவில் வட்ட அவைத் தலைவர் கே.ஜி. துளசிராமன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துறைமுகம் தொகுதி பார்வையாளர் கா.பிரபு ஆகியோர் சிறப்புரை.

இக்கூட்டத்தில் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி, எம்.விஜயகுமார், ஆர்.கலைச்செல்வி, எல்.சம்பத்குமார், பி.ஸ்ரீராமுலு, கே.ஆர்.அபரஞ்சி, எஸ்.ராஜேஷ் ஜெயின், டி.எஸ்.சேகர், நா.ரஞ்சித் விஜயாலயன், சி.காந்தி, டி.வேலு, கே.பவானி, ஆவின் சந்திரசேகர், பா.முத்துக்குமார், தேவகானம்ராஜா, கேபிள் சங்கர், பிண்ட்டு ஜெயின், ரூபாராம், நா.மோகன், பூக்கடை வெங்கடேசன், எல்.சாந்தி லால், எஸ்.அசோக் ஜெயின், டி.சேகர், பா.நடராஜன், ஆர்.வேலாயுதம், பூக்கடை ராஜா, எம்.ஆனந்தி, ரீட்டா, எஸ்.ராஜு, எம்.உதயா, எஸ்.முருகன், டி.சண்முகம், ஜி.கே.செல்வம், அபிநவ், மணிகண்டன், இ.லோகு, எம்.வருண்குமார், டி.சுரேஷ், சி.ராம்குமார், இ.பாபுராவ், பி.எல்.முரளி, ராமசந்திரன், அருண்குமார், எம்.சாய்பவன், ஜே.ஹரிக்குமார், சு.அண்ணா தாசன், எஸ்.கே.பாரூக் சுல்தான் மற்றும் கழக தோழர்கள், மகளிர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா! அறந்தாங்கியில்
# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் அண்ணா சிலைக்கு மாலை!
### மாவட்ட கழகத்தினருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்

புதுக்கோட்டை செப்12

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காக வும் , தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “ இப்படை தோற்கின் எப்படை வெல்லும் “ என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “ மெட்ராஸ் ஸ்டேட் “ என்ற பெயரை “ தமிழ்நாடு ” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப்பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 116 வது பிறந்த நாளான 15.9.2024



ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் எனது (அமைச்சர் எஸ்.ரகுபதி) தலைமையிலும், காலநிலை மாற்றம், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையிலும் அறந்தாங்கி பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம்

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர தி.மு.க செயலாளர் க.ராஜேந்திரன் செய்து வருகிறார்.



சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு பகுதி 180 அ வட்ட செயல்வீரர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் வி.எம்.டி. ராஜா ரமணன் தலைமையில் திருவான்மியூரில் நடைபெற்றது. கூட்டத்தில் வேளச்சேரி கிழக்குப் பகுதி செயலாளர் துரை கபிலன், மாமன்ற உறுப்பினர் விசாலாட்சி கபிலன் முன்னிலையில் வேளச்சேரி தொகுதி மேற்பார்வையாளர் பாலவாக்கம் தா.விஸ்வநாதன் சிறப்புரை ஆற்றினார். இதில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மன்றச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# கழக முப்பெரும் விழா-
# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!
### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



15.09.2024 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா மற்றும் இல்லம் தோறும் இளைஞர் அணி, மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை துவங்குதல் 17.9.2024 தந்தை பெரியார் பிறந்த நாள் அன்று கடலூர் கிழக்கு மாவட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர. பகுதி, பேரூர் பகுதிகளில் அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலை மற்றும் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், திமுக பவள விழா நிறைவை முன்னிட்டு அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள், வணிக வளாகங்கள், புதுபிக்கப்பட்ட கொடி கம்பங்களில் கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும் மற்றும் செப்டம்பர் 17ல் சென்னை நந்தனம் ஒய் எம்சிஏ திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கடலூர் கிழக்கு மாவட்டத்தினர் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியகுழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(பி.எல்.ஏ), பூத் கமிட்டி உறுப்பினர்கள்(பி.எல்.சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **எம்.ஆர்.கே. பன்னீர்சல்வம்,**
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### ச.தமிழ்செல்வன் தலைமை ! இரா.லட்சுமணன் முன்னிலை !
# 42(அ) வட்டக் கழகக் கூட்டம் ! ஆர்.டி.சேகர் சிறப்புரை !
### கலாநிதி வீராசாமி, ஜே.ஜே.எபினேசர், நந்தனம் நம்பிராஜன் பங்கேற்பு !

சென்னை, செப்12

சென்னை வடக்கு மாவட்டம், ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42(அ) வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (12.09.2024 வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் பழைய வண்ணை, டி.எச்.சாலை, லதா பார்ட்டி மகால் வைகை மகால் எதிரில் நடைபெறுகிறது.

வட்ட செயலாளர் ச.தமிழ்செல்வன் தலைமையில், பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலையில் வட்ட நிர்வாகிகள் கே.தேவதாஸ், கே.சங்கர், த.குமரேசன், வி.எஸ்.டி.பாலாஜி, வீ.செல்வமணி ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, சிறப்புரையாற்றுகிறார். நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கலாநிதி வீராசாமி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், தொகுதி பொறுப்பாளர் நந்தனம் நம்பிராஜன் ஆகியோர் ஆலோசனைகள் வழங்க உள்ளனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் இரா.வெற்றிவீரன், வழக்கறிஞர் என்.மருதுகனேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இர.பொன்இளவரசன், பகுதி நிர்வாகிகள் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், ப.ஆ.சண்முகம், மா.ரூபசங்கர், எஸ்.ஜெ.ராமு, கோ.ஹரிராமன், தே.ஜனார்த்தனன், ஜெ.வசந்தகுமார், சீ.கார்த்திக், கு.தமிழ்செல்வன், எம்.விஜயகுமார், தெ.கண்ணன், ஆர்.ராஜா, ஜெ.மகேஸ்வரி, எம்.கலைவாணி, வி.அருள், எஸ்.அரிஸ்குமார், எம்.சாந்தகுமார், எல்.டி.விக்னெஷ்வரன், பி.நாகு, பா.நீலமேகம், மு.அ.ஷெரிப், எம்.கானமூர்த்தி, ஆர்.கிரிஜா, என்.திருநாவுக்கரசு, வி.எஸ்.கன்னியப்பன், த.எத்திராஜ், எம்.ஆர்.நாகு, எஸ்.மூர்த்தி, பா.டேனியல், எஸ்.கே.ஹரிபாபு, பா.சேகர், பாகப் பொறுப்பாளர்கள் எஸ்.கிருஷ்ணமோகன், ஜெ.நாகராஜ், எம்.கிஷோர்குமார், டி.சக்கரவர்த்தி, ஏ.மோத்திராஜ், ஜி.விஜயலட்சுமி, ஜெ.ஜெயந்தி, என்.ராஜேஷ், த.ஜானகிராமன், சி.கோபாலகிருஷ்ணன், கே.வாசுதேவன், எம்.செல்வராஜ், ஐ.ஷோபனா, ஏ.பாண்டிய ராஜன், ஆர்.ராஜா, எல்.ராஜ்குமார், பு.சசிகுமார், இ.ஜெகதிஷ், எம்.கன்னியப்பன், டி.கமல்தாஸ், ஜி.காமராஜ், நா.சிவகுமார், டி.வெற்றிசெல்வி, மற்றும் கழக முன்னோடிகள், மன்றச் செயலாளர்கள், உறுப்பினர்கள், இளைஞரணி மற்றும் மகளிரணி தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

கே.மணி, ஜி.எம்.பிரபு, எச்.வசந்தகுமாரி, ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### 112 அ வட்டத் துணைச் செயலாளர்
# போட்டோ மோகன் மறைவு!




சென்னை, செப். 12 -

ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி, 112’அ’ வட்ட துணை செயலாளர் போட்டோ எஸ்.மோகன் நேற்று (11.09.2024 புதன்கிழமை) காலை 10.30 மணி அளவில் இயற்கை எய்தினார் அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (12.09.2024 வியாழக்கிழமை) பிற்பகல் 3 மணி அளவில் கோடம்பாக்கம், ஈஸ்வரர் நகர், 4 வது தெரு, 10/9 எண் இருந்து புறப்பட்டு ஏ.வி.எம் ஈடு காட்டில் தகனம் செய்யப்படுகிறது.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்தவுடன் கழகத்தினர் அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்
### செப்டம்பர் 12 (2022)



1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் “அண்ணா விருது” பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். ஸ்ரீதர்
### செப்டம்பர் 12 (2020)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**